Tamil

# தகவல் கையேடு 1 – ஆஸ்திரேலியாவில் மாற்றுத்திறன் குறையாளர் (Disability) பற்றிக் குறிப்பறிதல்.

பண்பாடு மற்றும் மொழிவாரியாக வேறுபட்ட பல்லினச் சமூகங்களைச் சார்ந்த மக்களுக்கு மாற்றுத்திறனாளர் குறித்து மொழிபெயர்க்கப்பட்ட தகவல்களை அளிப்பதற்காக அம்பாரோ காப்பு நிறுவனம் (AMPARO Advocacy) இந்தத் தகவல் கையேட்டை உருவாக்கி உள்ளது.

1. மாற்றுத்திறன் என்றால் என்ன?
2. ஆஸ்திரேலியாவில் மாற்றுத்திறன்.
3. மாற்றுத்திறனின் வகைகள்.
4. ஆரம்ப நிலையில் உதவி பெறுதல்.
5. தேவையான உதவி பெறுதல்.
6. எங்கே உதவி பெறலாம்.
7. மாற்றுத்திறன் சேவையில் செய்யப்பட்ட மாற்றங்கள்
8. மொழிபெயர்ப்பாளர்களை அணுகுதல்.
9. பேசுவதற்கு உதவி பெறுதல்.



## 1) மாற்றுத்திறன் என்றால் என்ன?

தன்னைத்தானே கவனித்துக் கொள்வதற்கோ, நடமாடுவதற்கோ, கேட்பதற்கோ, பார்ப்பதற்கோ, தெளிவாகச் சிந்திப்பதற்கோ கற்பதற்கோ கடினமாக உள்ளதாக ஒருவர் உணர்வாரேயானால், அவர் மாற்றுத்திறனுடையவராக இருக்கலாம். அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அவர்களுக்கு சிக்கல் இருக்கலாம்.

விபத்தினாலோ, அதிர்ச்சியினாலோ, நோயினாலோ மாற்றுத்திறன் ஏற்படலாம் அல்லது பிறக்கும்போதே மாற்றுத்திறனுடன் பிறக்கலாம். பொதுவாக மாற்றுத்திறன் என்பது ஒரு மனிதனின் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து அமைந்திருக்க வாய்ப்புள்ளது. ஆதலால், ஒன்றிரண்டு மாதங்கள் மட்டுமே உடல்நலமின்றி இருப்பதும், எலும்புமுறிவினைப் பெற்றிருப்பதும் மாற்றுத்திறன் என்று பொருள்படாது.

மற்றவர்கள் சிந்தனைகளாலும், சுற்றுச்சூழலாலும் (Home, workplace, environment) ஒரு மனிதனின் செயல்பாடு பாதிக்கப்படலாம். உதாரணமாக அவர்கள் வசிக்கும் வீட்டில் நடமாட இயலுதல், சூழல் பணியிடம் அல்லது சூழல் வாழ்விடம்.

## 2) ஆஸ்திரேலியாவில் மாற்றுத்திறன்.

ஆஸ்திரேலியாவில் உள்ள பொதுமக்கள் பெற்றிருக்கும் உரிமைகளைப் போல மாற்றுத்திறனாளிகளும் உரிமைகள் பெற தகுதியுடையார். மேலும், பிறர் செய்யும் செயல்களை, மாற்றுத் திறனாளிகள் செய்வதற்கு அனுமதிக்கப்படுவர். உதாரணமாக, கண்ணியமாக நடத்தப் படுவதற்கும், கல்வி கற்பதற்கும், பணியாற்றுவதற்கும், தங்கள் வாழ்விடத்தைத் தெரிவுசெய்து கொள்வதற்கும், தங்களுடைய வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்வதற்கும் அவர்களுக்கு முழு உரிமை உண்டு.

மாற்றுத் திறனாளிகள் சிறப்பாக வாழவும், தங்கள் குறிக்கோள்களையும், கனவுகளையும் நிறைவேற்றிக் கொள்ளவும், சமுதாயத்திற்குத் தங்களுடைய பங்களிப்பை வழங்கவும் இவர்களால் இயலும். மாற்றுத்திறனாளிகள் வலிமையும், ஆற்றலும் மிக்கவர்கள். புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள்.

குடும்பத்திலும், சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் தங்களை இணைத்துக்கொள்ள மாற்றுத்திறனாளிகள் விழைகிறார்கள். மேலும், ஆஸ்திரேலியச் சட்டம் இதற்கு உறுதுணையாக இருக்கிறது. ஆஸ்திரேலியாவில், மாற்றுத் திறனாளிகளை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது சட்டத்திற்கு எதிரானது.

ஒரு நபர் மாறுபட்ட விதத்தில் செயற்பட்டால், அவர் மாற்றுத்திறனாளியாகக் கருதப்படலாம். மேலும் பல்வேறு வகையிலான உதவிகள் அவர்களுக்குத் தேவைப்படலாம்.

அவையாவன:-

- குளிப்பதற்கு அல்லது நீராடுவதற்கு
- ஆடை அணிவதற்கு
- படுக்கையில் படுப்பதற்கு மற்றும் படுக்கையிலிருந்து எழுவதற்கு
- பேசுவதற்கும், புரிந்து கொள்வதற்கும்
- கடைக்குச் செல்வதற்கு
- சமுதாயத்தோடு இணைந்திருப்பதற்கு
- பணியிடம் அல்லது மருத்துவமனைகளுக்குச் செல்வதற்கு
- சக்கர நாற்காலி போன்ற கருவிகள் வாங்கிப் பயன்கொள்ள
- தங்களுடைய குடும்பத்தைக் கவனித்துக் கொண்டு நல்வாழ்வு வாழ்வதற்கு

அவர்களுக்குப் பிறருடைய உதவி தேவைப்படலாம்.

# 3. மாற்றுத்திறன்களின் வகைகள்

## அறிவுசார்ந்த மாற்றுத்திறன் (Intellectual Disability)

இத்தகைய அறிவுசார்ந்த மாற்றுத்திறன் உடையவர்கள், புதியவற்றைக் கற்றுக் கொள்வதிலும், சிக்கல் தீர்ப்பதிலும், கூர்ந்து கவனிப்பதிலும், நினைவுகூர்வதிலும் பிறரைக் காட்டிலும் கடினப்படுவர்.

இதற்கான காரணங்கள் பின்வருமாறு:-

- மாற்றுத்திறனுடன் பிறத்தல்
- கருவுறுதலின்போது ஏற்படும் இடையூறுகள் (எ.கா, போதிய பிராணவாயு (ஆக்ஸிஜன்) கிடைக்கப் பெறாமை)
- உடல்நலம் சார்ந்த இடையூறுகள்
- போதிய உணவு அல்லது நல்லமருத்துவ வசதி கிடைக்கப் பெறாமை,

## உடல் சார்ந்த மாற்றுத்திறன்

உடல்சார்ந்த மாற்றுத்திறனானது, உடற்செயற்பாடுகளையோ, நகரும் திறனோ, சிறுநீர்ப்பை கட்டுப்பாட்டையோ பாதிக்கலாம் அல்லது அது உடலில் ஒரு பகுதியைப் பாதிக்கலாம். உதாரணமாக, ஒரு கால் அல்லது ஒரு கை இல்லாமல் இருப்பது. உடல் சார்ந்த மாற்றுத்திறனுக்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. ஒருவர் பிறக்கும்போதே மாற்றுத்திறனுடன் பிறக்கலாம் அல்லது விபத்தினாலோ, நோய்களின் மூலமாகவோ மாற்றுத்திறன் ஏற்படலாம். தண்டுவடபாதிப்பு (Spinal injury), மற்றும் மூளைத் தண்டுவட பாதிப்பு (Cerebral Palsy) போன்றவை உடல்சார்ந்த மாற்றுத்திறனில் அடங்கும்.

## நரம்பியல் சார்ந்த மாற்றுத்திறன்

நரம்பியல் சார்ந்த மாற்றுத்திறன் என்பது, மூளையின் தகவல்களைக் கையாளும் விதத்தையும், அது உடலின் மற்ற பாகங்களோடு தொடர்புகொள்ளும் விதத்தையும் பாதிக்கிறது. உதாரணமாக; பேசுதல், சிந்தித்தல் மற்றும் நகர்தல். மக்கள் பிறக்கும் போதே இத்தகைய மாற்றுத்திறனுடன் பிறக்கலாம் அல்லது சிறிது காலம் கழித்தோ, விபத்தினாலோ இத்தகைய மாற்றுத்திறன் ஏற்படலாம்.

## மனநோய் (Mental Illness)

மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிந்திப்பதிலும், உணர்தலிலும் மற்றும் பிறருடன் பழகுவதிலும் இடர்ப்பாடு அடையக்கூடும். இந்நிலையால் அவர்களுடைய உறவுமுறைகளைப் பாதிப்பதோடு, பணிபுரியும் திறனையும், வாழும் திறனையும் வெகுவாக பாதிக்கலாம். இத்தகைய நபர்கள் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகி அன்றாட வாழ்க்கையில் பங்குகொள்ளும் திறனும் பாதிக்கப்படுகிறது. இதனால் அவர்களின் உறவு முறை, பணி மற்றும் வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் இருக்கலாம்.

## உணர்திறன் சார்ந்த மாற்றுத்திறன்

காது கேளாமை, பார்வைக் குறைபாடு மற்றும் வாய் பேசாமை போன்றவை இதில் அடங்கும்.

### பெறப்பட்ட மூளை பாதிப்பு **(Acquired Brain Injury)**

பிறந்த பின்பு மூளையில் ஏற்படும் எந்தவித பாதிப்புமே, 'பெறப்பட்ட மூளை பாதிப்பு' எனப்படுகிறது. இது வாகன விபத்தினாலோ, விளையாட்டின் போதோ அல்லது பிற விபத்துக்களினாலோ, பக்கவாதத்தாலோ, மூளைக்கட்டியினாலோ, மது மற்றும் போதைப்பழக்கத்தாலோ, நச்சுப்பொருட்களாலோ ஏற்படலாம். பெறப்பட்ட மூளை பாதிப்பானது, சிறிய காயமோ, குறுகிய பாதிப்பாகவோ மற்றும் வாழ்நாள் முழுவதும் தொடரும் கடும் பாதிப்பாகவோ, தீவிர பாதிப்பாகவோ இருக்கலாம்.

### கலை அறிவியல்பு இறுக்கம் **(Autism)**

கலை அறிவியல்பு இறுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள், மொழிசார்ந்த இடர்ப்பாடுகளைக் கொண்டிருப்பதோடு, கருத்துப் பரிமாற்றம் மற்றும் சமூகத் திறன்களைக் வளர்த்துக் கொள்வதிலும் தடுமாறுவர். அவர்கள் ஒலி, தொடுகை, சுவை, மணம், ஒளி மற்றும் வண்ணங்கள் போன்றவற்றில் அதீத உணர்வு மிக்கவர்களாக இருப்பர்.

## 4. தொடக்கத்திலேயே அறிதல்

உங்கள் குழந்தைக்கு மாற்றுத்திறன் உள்ளது என நீங்கள் நினைத்தால், இயன்றவரை, விரைந்து அதற்கான உதவிகளை நாடிப்பெறலாம். அப்படியான உதவி அவர்களின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் பயனளிக்கும். இதன்மூலம், பிற்காலத்தில் அவர்கள் குறைந்தளவு உதவிகளை நாடிப் பெறுவதே போதுமானதாக இருக்கும்.

உதவிகளை முன்கூட்டியே விரைந்து பெறுவதால், குடும்பத்தினர் தங்கள் குழந்தையின் மாற்றுத்திறனை அடையாளம் கண்டு, சிறந்த முறையில் பேணிக் காக்கலாம்.

## 5. தேவையான உதவிகளைப் பெறுதல்

சில மாற்றுத்திறனாளிகளும், அவர்களின் குடும்பத்தாரும் தங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற அவதிப்படுகிறார்கள். எவ்வகையான மாற்றுத்திறன் தங்களுக்கு உள்ளது என்பதை முதலில் புரிந்துகொள்வது அவசியமாகும். ஏதேனும் ஒரு திறன் குன்றியிருப்பதாகில், அதை எவ்வாறு கண்டறிவது என்பது குறித்து மருத்துவரிடம் பேசித் தெளிவு பெறலாம். மாற்றுத்திறனாளிகளுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் உதவ பல்வேறு வகையிலான சேவைகளும், ஆதரவும் உள்ளன.

## 6. எங்கே உதவி பெறலாம்?

குயீன்ஸ்லாந்தில் வாழ்பவராக இருந்து, தங்களுக்கோ, தங்கள் குடும்பத்தில் ஒருவருக்கோ உதவி தேவைப்படின், 13 74 68 என்ற தொலைபேசி எண்ணை அழைத்து, தங்களின் நிலைமை குறித்து மாற்றுத்திறன் சேவை அமைப்பிலுள்ள ஒருவருடன் தொடர்பு கொண்டு பேச இயலும்.

## 7. மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகளில் செய்யப்பட்ட புதிய மாற்றங்கள்

அடுத்த மூன்று ஆண்டுகளில், மாற்றுத்திறனாளிகளும் அவர்களின் குடும்பங்களுக்கும், தேவையான உதவிகளைக் கோரிப்பெறும் முறைகளில் பெரிய அளவிலான மாற்றமும், மேம்பாடும் செய்யப்படும். இதுகுறித்து தகவல்களைத்

தெரிந்துகொள்ள தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டத்தின் www.ndis.gov.au வலைதளத்தை நாடலாம், (அ) 1800 800 110 என்ற தொலைபேசி எண்ணை அழைத்து பேசலாம் (அ) தங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவையெனில் (TIS) 131 450 எனும் தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

## 8.தங்களுக்கு மொழிபெயர்ப்பாளரோ அல்லது மொழிபெயர்க்கப்பட்ட தகவல்களோ தேவையா?


குயீன்ஸ்லாந்து மாநில அரசின் வழியாக நிதியுதவி பெறும் மாற்றுத் திறனாளிகளுக்கான அனைத்துச் சேவை மையங்களும், தேவை ஏற்படும்போது மொழிபெயர்ப்பாளர்களை வழங்கவேண்டும். எனவே, தங்களுக்கு உரைபெயர்ப்பாளர் (Interpreter) வேண்டுமெனில் கோரிப்பெறலாம். தேசிய மாற்றுத்திறன் காப்பீட்டுத் திட்டம் மொழிபெயர்ப்பாளர் (Translator) வசதிகளையும் வழங்குகிறது. உரைபெயர்ப்பாளர்கள் போதிய பயிற்சி பெறுவதோடு தங்கள் விவரங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். தாங்கள் புரிந்துகொள்ளும் வகையில் சேவைகள்/உதவிகள் வழங்கப்பட வேண்டும். எ.கா, தகவல்களைத் தங்கள் மொழியில் மொழிபெயர்த்துத் தருமாறு கோரலாம்.

## 9. ஆதரித்து உதவுதல் (Advocacy Support)

தங்களுக்குத் தேவையான உதவிகளைப் ஒரு சட்ட முகமையிடமிருந்து கோரிப் பெறலாம்.

குயீன்ஸ்லாந்தில் பின்வரும் முகமைகளைத் தொடர்பு கொள்ளலாம்:-

| | |
|---|---|
| AMPARO Advocacy *(Brisbane)* | 3354 4900 |
| Capricorn Citizen Advocacy *(Rockhampton)* | 4922 0299 |
| Gold Coast Advocacy | 5564 0355 |
| Independent Advocacy Townsville | 4725 2505 |
| Ipswich Regional Advocacy Service | 3281 6006 |
| Mackay Advocacy Inc | 4957 8710 |
| Queensland Advocacy Incorporated | 3844 4200 |
| Rights In Action Incorporated *(Cairns)* | 4031 7377 |
| Speaking Up For You *(Brisbane/ Caboolture)* | 3255 1244 |
| Sunshine Coast Citizen Advocacy | 5442 2524 |
| The Advocacy and Support Centre *(Ipswich)* | 3812 7000 |
| The Advocacy and Support Centre *(Toowoomba)* | 4616 9700 |
| People with Disability Australia (*Bundaberg, Fraser Coast, Logan, Mt Isa, Sunshine Coast)* | 1800 422 015 |



## புகார்களைப் பதிவு செய்யலாம்

தாங்கள் உதவிக்காக ஒரு நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு, அவர்கள் உதவிசெய்ய மறுத்த பின்னரும், தாங்கள் அவர்களிடம் மீண்டும் உதவி கோரலாம் அல்லது அந்நிறுவனத்தின் மீது புகார் பதிவு செய்யலாம்.

தங்களை பண்பாட்டின் அடிப்படையிலோ, மாற்றுத்திறன் அடிப்படையிலோ வேறுபாட்டுடன் நடத்தப்படுவதாக உணர்ந்தால், குயீன்ஸ்லாந்தின் வேறுபாட்டிற்கு எதிரான ஆணையத்தினை 1300 130 670 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## பொறுப்புத்துறப்பு (Disclaimer)

இந்த தகவல் Amparo Advocacy Inc-ஆல் உருவாக்கப் பட்டுள்ளது. எவ்வித தவறும் நேராவண்ணம், மிகுந்த கவனத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. இக்கையேடு தங்கள் சூழலைப் பொதுவாகக் கோடிட்டுக்காட்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதே தவிர, மிகத் துல்லியமானதாகவோ, நடப்பிலுள்ளதாகவோ அல்லது முழுமையானதாகவோ இல்லாமல் இருக்கலாம். தங்களின் தனிப்பட்ட பரிந்துரை வரவேற்கப்படும்.

AMPARO Advocacy inc

53 Prospect Road, Gaythorne, QLD 4051
PO Box 2065, Brookside Centre, QLD 4053
www.amparo.org.au info@amparo.org.au

phone 07 3354 4900
Interpreter Service 131450